# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## மானியக் கோரிக்கை எண்.37

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

### 2018 – 2019

**பி. தங்கமணி**

**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2018

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–3 |
| 2. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை – நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள் | 3 |
| 3. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் | 4–31 |
| 4. | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு | 31–38 |
| 5. | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | 38–49 |
| 6. | போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு | 49–60 |
| 7. | முடிவுரை | 60 |
| 8. | இணைப்புகள் 1 – 6 | 61–77 |

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 37

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2018–2019

### 1. முன்னுரை

**1.1** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், மாநிலப் பட்டியலில் 7–வது அட்டவணையின் பதிவுகள் 8 மற்றும் 51–ல், போதையூட்டும் மதுபானங்களைத் தயாரிக்கவும், வைத்திருக்கவும், கொண்டு செல்லவும், கொள்முதல் மற்றும் விற்பனை செய்வதற்கும், அருந்தத்தக்க மதுபானங்களுக்கு ஆயத்தீர்வை விதிப்பதற்கும், சட்டம் இயற்ற மாநில சட்டமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், கள், சாராயம் மற்றும் நாட்டு மது விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானம் மட்டுமே விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

1.2 இந்த அரசு, பூரண மதுவிலக்கை எய்தும் வகையில் முதற்கட்ட நடவடிக்கையாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்கள் ஆகியவற்றின் பணி நேரம் குறைக்கப்படும் எனவும் மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் எனவும் ஆணை பிறப்பித்தது. அதன்படி 24.05.2016 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் மற்றும் மதுக்கூடங்களில் முன்னர் இருந்த காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை என்ற பணி நேரத்தினை நண்பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரை என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 500 தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் 19.06.2016–ல் மூடப்பட்டன. 24.02.2017 அன்று முதல் மேலும் 500 மதுபானக் கடைகள் மூடப்பட்டன. எனவே, 2016–2017–ல் மொத்தம் 1000 தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் மூடப்பட்டன.

1.3 கள்ளத்தனமான மற்றும் ஆயத்தீர்வை செலுத்தாத மதுபானங்களை முற்றிலும் ஒழிக்க தமிழக அரசு மாநில மதுவிலக்குச் சட்டத்தின்படி கடுமையான

நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், கள்ள மதுபானத் தொழிலில் முன்னர் ஈடுபட்டிருந்த குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் ஒருமுகப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

## 2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை – நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள்

**2.1** தமிழ்நாடு அரசின் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் நான்கு அமைப்புகள் செயல்படுகின்றன:-

(i) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

(ii) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

(iii) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

(iv) போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு

## 3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

**3.1** மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர், **1937–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் **10/1937)** மற்றும் அச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளைச் செயல்படுத்தும் அதிகாரி ஆவார். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் விதிகள் பற்றிய விவரங்கள் **இணைப்பு–1–**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**3.2** மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவியாக, மாநிலத் தலைமையிடத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் இரண்டு இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் (நிதித் துறை) நிலையில் ஒரு நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் ஐந்து உதவி ஆணையர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

**3.3** மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள், **1937–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பல்வேறு அம்சங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில், மாவட்ட

ஆட்சியருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு துணை ஆணையரும் (ஆயத்தீர்வை) மற்றும் பிற மாவட்டங்களில் துணை ஆட்சியர் நிலையில் ஒரு உதவி ஆணையரும் (ஆயத்தீர்வை), இவர்களுக்கு உதவியாக வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் நிலையில் உள்ள இதர அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

**3.4** துணை ஆட்சியர் நிலையில், வடிப்பாலைகளில் வடிப்பாலை அலுவலர்களும் மற்றும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான, பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்களில் ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி, ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருள்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல் மற்றும் சாராவி பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக இரசாயன தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் நிலையிலுள்ள அலுவலர்கள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும்,

பிணைமுறி அலுவலர்களாகவும் (Bonded Manufactory Officers) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு**

**3.5** சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை தயாரிப்பின்போது துணைப்பொருளாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சாராவியைத் தயாரிப்பதற்கு ஒரு பொது மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு கால்நடைத் தீவனம், கோழித் தீவனம், எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தல் ஆகியவற்றுக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. தற்போது, இம்மாநிலத்தில் **46** சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் **16** கூட்டுறவுத் துறையிலும், **3** பொதுத் துறையிலும் மற்றும் **27** தனியார் துறையிலும் உள்ளன. மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் விவரங்கள் **இணைப்பு–2**–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**3.6** **1958**–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின் படி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் அவர்கள் இம்மாநிலத்தில் கிடைக்கப்பெறும் கருப்பஞ்சாற்றுக்

கசண்டினை கருத்தில் கொண்டு தேவைகளுக்கேற்ப ஒதுக்கீடு செய்கிறார். கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல், விற்பனை, பயன்பாடு, போக்குவரத்து, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான உரிமம் மற்றும் அனுமதி ஆணைகள் உரிய அதிகாரிகளால் மேற்படி விதிகளின்படி வழங்கப்படுகின்றன.

3.7 1958–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின் கீழ், வெளிமாநிலங்களிலிருந்து கருப்பஞ்சாற்றுக் கசண்டு இறக்குமதி செய்ய எம்.எல்–2 அல்லது எம்.எல்–4 உரிமதாரர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய எம்.எல்–2 உரிமதாரர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி உரிமம் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமம் வழங்குவதற்குமுன், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் ஆணையரது ஒப்புதல் பெற வேண்டும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு நிர்வாக சேவைக்

கட்டணமாக மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.300/– வீதம் வசூலிக்கப்படுகிறது.

**வடிப்பாலைகள் மற்றும் சாராவி**

**3.8** தமிழ்நாட்டில் 19 சாராவி உற்பத்தி செய்யும் வடிப்பாலைகள் உள்ளன. அவற்றில் 17 வடிப்பாலைகள் தனியார் துறையிலும் மற்றும் 2 வடிப்பாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன. மாநிலத்தில் இயங்கி வரும் வடிப்பாலைகளின் விவரங்கள் **இணைப்பு–3–**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**3.9** சாராவி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் தயாரிப்பதற்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இச்சாராவி, ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் சிறிய அளவில் பயன்படுத்தப்படுகிறது. வண்ணப்பூச்சுகள் (Paint) மற்றும் வார்னிஷ் (Varnish) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் இயல்பு மாற்றப்பட்ட சாராவி (Denatured Spirit), கரைப்பானாக (solvent) பயன்படுத்தப்படுகிறது.

**தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி (Grain based ENA)**

**3.10** தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி உயர்தர இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. தற்போது, தமிழகத்தில் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி தயாரிக்கும் வடிப்பாலைகள் எதுவும் இல்லை. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவியினை வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்வதற்கு, அரசின் முன் அனுமதியைப் பெற்று மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதி வழங்கப்படுகிறது.

**எத்தனால் (Ethanol)**

**3.11** தமிழகத்திலுள்ள 19 வடிப்பாலைகளில், 12 வடிப்பாலைகள் (விவரங்கள் **இணைப்பு–4–ல்**) எத்தனால் உற்பத்தி செய்கின்றன. வடிப்பாலைகளிலுள்ள மாசு சாராவியினை (Impure Spirit) பயன்படுத்தி எத்தனால் தயாரிக்க சில வடிப்பாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எத்தனால் உற்பத்தி செய்ய

அனுமதிக்கப்பட்ட மாசு சாராவியின் அளவு விவரங்கள் **இணைப்பு—5—**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்**

**3.12** தமிழ்நாட்டில் 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்களும், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்களும் மற்றும் ஒரு ஒயின் தயாரிக்கும் நிறுவனமும் இயங்கி வருகின்றன. இவற்றின் விவரங்கள் **இணைப்பு—6—**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**பீர் ஏற்றுமதி**

**3.13** பீரினை தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்து **2013—**ஆம் ஆண்டில் அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், **2015—**ஆம் ஆண்டில் பீரினை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் நேர்வில் ஆயத்தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், ஏற்றுமதிக் கட்டணம் மற்றும் ஏற்றுமதி உரிமக் கட்டணம் ஆகியவற்றை மாற்றியமைத்தும், விதிகளில் திருத்தங்கள் செய்தும் அரசு ஆணையிட்டுள்ளது. வெளி

மாநிலங்களுக்கு பீர் ஏற்றுமதி செய்யப்பட்ட விவரங்கள் (ஆண்டுவாரியாக) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

| ஆண்டு | ஏற்றுமதி செய்யப்பட்ட எண்ணிக்கை (பெட்டிகளில்) | பெறப்பட்ட ஏற்றுமதி கட்டணம் (ரூ. லட்சங்களில்) |
|---|---|---|
| 2015–2016 | 1,15,000 | 18.04 |
| 2016–2017 | 5,56,490 | 87.09 |
| 2017–2018 | 10,08,625 | 161.69 |

**3.14** அயல்நாடுகளுக்கு பீரினை ஏற்றுமதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு மதுவிலக்குச் (இரண்டாவது திருத்தம்) சட்டம், 2017–ன்படி (சட்டம் எண்.33/2017), 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், பிரிவு 3–க்கு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும், பீரினை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக தமிழ்நாடு பீர் வடிப்பாலை விதிகள், 1983–ல் திருத்தங்கள் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

**நீரா**

**3.15** தென்னை மரத்தின் பூம்பாளையிலிருந்து சாற்றினைக் கலன்களில் சேகரித்து, அச்சாறு நொதிக்கவிடாமலிருக்க நொதிப்பு எதிர்ப்பு தொழில்நுட்பத்தினைப் (Anti Fermentation Technology) பயன்படுத்தி தயாரிக்கப்படும் பானமே "நீரா" எனப்படும். இப்பானம் ஆல்கஹால் இல்லாத ஊட்டச்சத்து பானம் ஆகும்.

**3.16** தென்னை மரங்களிலிருந்து நீரா சேகரிக்கவும், நீரா பானத்திலிருந்து பொருட்கள் தயாரிக்கவும் ஏதுவாக, **1937**–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, **22.09.2017** முதல் அமல்படுத்தப்பட்டது. மேலும், "தமிழ்நாடு நீரா விதிகள், **2017**" என்ற விதியினை இயற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தென்னை மரங்களிலிருந்து நீரா சேகரிப்பதற்கும், நீராவிலிருந்து இதர பொருட்கள் தயாரிக்கவும் அனுமதி வழங்கி அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**3.17** நீராவினை சேகரிக்கவும், விநியோகிக்கவும், விற்கவும் மற்றும் நீராவிலிருந்து பொருட்கள் தயாரிப்பதற்குமான உரிமங்கள், நிறுவனங்கள் சட்டம், **2013**–ல்

(Companies Act, 2013) பதிவுசெய்யப்பட்ட தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கும் (Coconut Producers Companies) மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங்கள் சட்டம், **1983–**ல் (Tamil Nadu Co-operative Societies Act, 1983) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கும் (Co-operative Societies) வழங்கப்படும். உரிமம் கோரி விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவை தென்னை வளர்ச்சி வாரியத்திலும் (Coconut Development Board) பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். உரிமங்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியர் மூலம் வழங்கப்படும்.

**3.18** நீரா உற்பத்தி, வேலை வாய்ப்பினைப் பெருக்குவதுடன் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும்.

**பதநீர்**

**3.19** பனை மரம், ஈச்ச மரம் மற்றும் பனை மரம் ஒத்த இதர மரங்களின் பூம்பாளையிலிருந்து பதநீரை சேகரிக்கவும், இருப்பு வைத்துக் கொள்ளவும், கொண்டு செல்லவும், விற்பனை செய்யவும் மற்றும் பதநீரிலிருந்து பொருட்களைத்

தயாரிக்கவும் ஏற்கெனவே இருந்த தமிழ்நாடு நீரா அல்லது பதநீர் விதிகள், 1939–ஐ மாற்றி அமைத்து ‘‘தமிழ்நாடு பதநீர் விதிகள், 2017’’ என்ற விதியினை இயற்றி அரசு உத்தரவிட்டுள்ளது.

**அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி**

**3.20** வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், நட்சத்திர விடுதிகள் மற்றும் மனமகிழ்மன்றங்களின் மதுபானத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, 1981–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்படி அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு, உரிய சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்ட பின்னர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்களால் அனுமதி ஆணைகள் வழங்கப்படுகின்றன. அயல்நாட்டு மதுபான வகைகளின் இறக்குமதியைச் சீரமைக்க 02.03.2012 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் வழிகாட்டும் முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்ய செலுத்தப்படும் சிறப்புக் கட்டணத் தொகையில் 3% சேவைக் கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் வசூலிக்கப்படுகிறது. மேலும், அயல்நாட்டு மதுபான முதற்கட்ட விற்பனை மீது 58% மதிப்புக் கூட்டு வரியும் விதிக்கப்படுகிறது.

**2017–2018–**ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினால் சேவைக் கட்டணம் மூலமாக ரூ.**23.98** லட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில சில்லறை மதுபான விற்பனைக் கடைகள் மூலமாகவும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களின் சிறப்புக் கட்டணம் மூலமாக கிடைக்கப் பெற்ற வருவாய் பின்வருமாறு:–

| வ.எண் | நிதியாண்டு | சிறப்புக் கட்டணம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | 2010–2011 | 1.86 |
| 2 | 2011–2012 | 1.96 |
| 3 | 2012–2013 | 2.70 |
| 4 | 2013–2014 | 3.30 |
| 5 | 2014–2015 | 7.39 |
| 6 | 2015–2016 | 7.74 |
| 7 | 2016–2017 | 10.80 |
| 8 | 2017–2018 | 11.24 |

**மாண்பமை உச்சநீதிமன்ற உத்தரவின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம்**

**3.21** மாண்பமை உச்சநீதிமன்றம் தனது **15.12.2016** மற்றும் **31.03.2017** தேதியிட்ட ஆணைகளில் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டது:-

**(1)** தேசிய/மாநில நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு உரிமங்கள் வழங்கப்படுவதை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

**(2)** ஏற்கெனவே செயல்பட்டு வரும் உரிமங்கள் இந்த உத்தரவுக்கு முன்னால் புதுப்பிக்கப்பட்டிருப்பின் உரிமகாலம் காலாவதி ஆகும்வரை தொடர்ந்து செயல்படலாம். ஆனால் **01.04.2017**–க்குப் பின்னர் செயல்பட அனுமதிக்கக் கூடாது.

**(3)** மது விற்பனை தொடர்பாக தேசிய/மாநில நெடுஞ்சாலைகளில் குறியீடுகள் மற்றும் விளம்பரப் பலகைகள் வைப்பதைத் தடை செய்வதுடன் ஏற்கெனவே

வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

**(4) 20,000** மற்றும் அதற்குக் குறைவாக மக்கள்தொகை கொண்ட உள்ளாட்சிப் பகுதிகளில், தேசிய / மாநில நெடுஞ்சாலை / நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகு பாதையிலிருந்து, **220** மீட்டர் தூரத்திற்குள் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்கக் கூடாது.

**(5) 20,000**-க்கும் அதிகமாக மக்கள்தொகை கொண்ட உள்ளாட்சிப் பகுதிகளில், தேசிய/மாநில நெடுஞ்சாலை/நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகு பாதையிலிருந்து, **500** மீட்டர் தூரத்திற்குள் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்கக் கூடாது.

**3.22** மாண்பமை உச்சநீதிமன்றத்தின் மேற்படி உத்தரவுகளை உடனடியாக செயல்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மதுபானங்கள் விற்பனை தொடர்பாக தேசிய/மாநில நெடுஞ்சாலைகளில் வைக்கப்பட்டிருந்த குறியீடுகள் மற்றும் விளம்பரங்கள் அனைத்தும்

அகற்றப்பட்டன. மாண்பமை உச்சநீதிமன்ற உத்தரவின்படி தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தனது 3,321 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை 01.04.2017 அன்று மூடியது. கடைகளை இடமாற்றம் செய்யும்போது, மாண்பமை உச்சநீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் 2003–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளில், விதி எண்.8(1)–ல் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி (norms) கடைகளின் புதிய அமைவிடம் அமைந்துள்ளதா என்பது உறுதி செய்யப்படுகிறது. பொதுமக்கள் எழுப்பும் நியாயமான ஆட்சேபணைகளும் கடைகளை இடமாற்றம் செய்வது குறித்து முடிவெடுப்பதற்கு முன்பு கவனத்தில் கொள்ளப்படுகிறது. தேசிய/மாநில நெடுஞ்சாலை/நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகு பாதையிலிருந்து 500 மீட்டர்/220 மீட்டர் (அதற்கேற்றவாறு) தூரத்திற்குள் அமைந்துள்ள எப்.எல்–2 / எப்.எல்–3 / எப்.எல்–3ஏ / எப்.எல்–3ஏஏ மற்றும் எப்.எல்–4 உரிமத் தலங்களில் செயல்பட்டு வந்த மதுபானக் கூடங்கள் அனைத்தும் 01.04.2017 முதல் மூடப்பட்டன. மாண்பமை உச்சநீதிமன்ற உத்தரவின்படி தேசிய / மாநில நெடுஞ்சாலை / நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள

அணுகு பாதையிலிருந்து 500 மீட்டர்/220 மீட்டர் (அதற்கேற்றவாறு) தூரத்திற்குள் செயல்பட்டு வந்த 124 எப்.எல்–2 உரிமங்கள், 512 எப்.எல்–3 உரிமங்கள், 12 எப்.எல்–3ஏ உரிமங்கள், 6 எப்.எல்–3ஏஏ உரிமங்கள் மற்றும் 20 எப்.எல்–4ஏ உரிமங்கள் 01.04.2017 முதல் மூடப்பட்டன.

3.23 மாண்பமை உச்சநீதிமன்றம் தனது 11.07.2017 தேதியிட்ட உத்தரவில், 15.12.2016–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்பது நகர்ப்புறம் மற்றும் கிராமங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள மற்றும் அருகாமையில் உள்ள பகுதிகளில் மதுபானம் விற்பனை செய்வது தொடர்பானது எனப் புரிந்துகொள்ளப்பட வேண்டும் எனவும் இவ்வுத்தரவு, நகர்ப்புறப் பகுதிகளுக்குள் உரிமம் பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்களை தடைசெய்யாது எனவும், இந்தத் தெளிவுரை இதர நகர்ப்புறப் பகுதிகளுக்கும் பொருந்தும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

3.24 மாண்பமை உச்சநீதிமன்றத்தின் 11.07.2017 நாளிட்ட உத்தரவின்படி, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்குள் அமையப் பெற்ற எப்.எல்–1 முதல் எப்.எல்–11 வரையிலான உரிமங்கள் உடனடியாக மீண்டும் செயல்படத்

தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில், 810 சில்லறை விற்பனை மதுபானக் கடைகள், 97 எப்.எல்–2 உரிமங்கள், 463 எப்.எல்–3 உரிமங்கள், 9 எப்.எல்–3ஏ உரிமங்கள், 4 எப்.எல்–3ஏஏ உரிமங்கள் மற்றும் 20 எப்.எல்–4ஏ உரிமங்கள் 01.09.2017 முதல் மீண்டும் செயல்பாட்டிற்கு வரப்பெற்றுள்ளன.

3.25 மாண்பமை உச்ச நீதிமன்றம் 23.02.2018 நாளிட்ட ஆணையில், உள்ளூர் சுய ஆட்சி அமைப்புகள் மற்றும் சட்டமுறை வளர்ச்சிக் குழுமங்களில் அமைந்துள்ள பகுதிகளுக்கு, அரைவ் சேப் சொசைட்டி என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் 11.07.2017 அன்று வழங்கிய உத்தரவில் வகுக்கப்பட்ட கொள்கைகள் பொருந்துமா என்பதை மாநில அரசுகள் தீர்மானிக்க எவ்விதத் தடையும் இல்லை எனக் கருதியது. மேலும், உள்ளூர் சுய ஆட்சி அமைப்பிற்குள் அமைந்த ஒரு பகுதி நகராட்சி கூட்டமைப்பிற்கு அருகில் உள்ளதா அல்லது போதுமான அளவு வளர்ச்சி அடைந்துள்ளதா என்பதைத் தீர்மானிக்க மாநில அரசுகளுக்கு அனுமதி வழங்கியது. தனிப்பட்ட உரிமதாரர்கள் தங்களது முறையீடுகளை மாநில அரசின் உரிய அதிகாரிகளிடம்

அளிக்கலாம் என்றும், மாநில அரசுகள் அவற்றின் மீது பொருத்தமான முடிவுகளை எடுக்கலாம் என்றும் மாண்பமை உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

3.26 மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் 28.04.2018 அன்று வழங்கிய தீர்ப்பில், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அமைந்துள்ள எப்.எல்—1 மற்றும் எப்.எல்—11 உரிமம் பெற்ற கடைகளை உடனடியாக செயல்பட அனுமதிப்பது குறித்து மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் 01.09.2017 நாளிட்ட கடிதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், மாநில அரசு, அமைக்கப்பட்ட/அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மற்றும் அல்லது மீண்டும் திறக்கப்பட்ட மதுபானக் கடைகள் அரைவ் சேப் சொஸைட்டி ஆப் சண்டிகர் என்ற வழக்கில் மாண்பமை உச்ச நீதிமன்றம் 11.07.2017 அன்று பிறப்பித்த உத்தரவிற்குட்பட்டதா என்பதைத் தனித்தனியாக தீர்மானிக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தது. மேற்கூறிய ஆணைக்கிணங்க நகர்ப்புறப் பகுதிகளில் செயல்பட்டு வந்த 810 சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் உடனடியாக மூடப்பட்டன.

**3.27** மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் **28.04.2018** நாளிட்ட ஆணைக்கு எதிராக மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசால் ஒரு சிறப்பு விடுப்பு மனு (SLP) தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவில் மாண்பமை உச்சநீதிமன்றம் வழங்கிய **14.05.2018** நாளிட்ட தீர்ப்பில், மாண்பமை உச்சநீதிமன்றம் பிறப்பித்த **23.02.2018** நாளிட்ட உத்தரவினை கவனத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு தகுந்த ஆணைகள் பிறப்பிக்க ஒரு வார கால அவகாசம் அளித்தது.

**3.28** மேற்காணும் மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர்கள் சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் அமையக்கோரி வரப்பெறும் மனுக்களை தனித் தனியாகப் பரிசீலித்து ஒப்புதல் வழங்கும் முன் கருத்தில் கொள்ள வேண்டிய அளவுருக்களை வரையறுத்து தமிழக அரசு அரசாணை (நிலை) எண்.**32**, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (VI) துறை, நாள்.**21.05.2018**—ல் ஆணை பிறப்பித்தது. மேலும் உரிமம் வழங்கும் அலுவலர் மதுபான வைப்பு/விற்பனைக்காக வழங்கப்படும் உரிமங்கள் / புதுப்பிக்கக் கோரும் உரிமங்களைத் தனித் தனியாகப் பரிசீலித்து ஒப்புதல் வழங்கும் முன் அரசாணையில் வரையறுக்கப்பட்ட அளவுருக்களை

கருத்தில் கொள்ள வேண்டும் என ஆணையிடப்பட்டது. மேற்கூறிய அளவுருக்கள் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் ஒட்டுமொத்த வழிகாட்டுதல்களின்படி வரையறுக்கப் பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர்கள் தனிப்பட்ட மனுக்கள் மீது உத்தரவுகள் பிறப்பிக்கும் முன் புலத் தணிக்கை மேற்கொள்ள வேண்டும். உரிமதாரர்கள், 2003–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகள் மற்றும் 1981–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை நிறைவு செய்திருக்க வேண்டும்.

**3.29** மாண்பமை உச்சநீதிமன்றம் தனது 23.05.2018 நாளிட்ட தீர்ப்பில், மாண்பமை உச்சநீதிமன்றத்தின் 23.02.2018 நாளிட்ட உத்தரவினை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை உள்ளடக்கியுள்ளது எனத் தெரிவித்து அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை அமல்படுத்த அனுமதி வழங்கியது.

**மாநில ஆயவில்லைகள்**

**3.30** கள்ள மற்றும் போலி மதுபானங்களின் நடமாட்டம் மற்றும் விற்பனையைத் தடுக்கும் பொருட்டு, **2003**–ஆம் ஆண்டு முதல் அதிக பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய செயற்கை இழை ஆயவில்லைகளை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மூலம் விற்பனை செய்யப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள், பீர் மற்றும் ஒயின் பாட்டில்கள் மீது ஒட்டி விற்பனை செய்யப்படும் நடைமுறையானது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்களும் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தற்போது மாதமொன்றுக்கு சராசரியாக **21.95** கோடி ஆயவில்லைகள் தேவைப்படுகின்றன. **2017–2018**–ஆம் ஆண்டில் ஆய வில்லைகளின் விற்பனை மூலம் அரசு ஈட்டியுள்ள வருவாய் ரூ.**19.92** கோடியாகும்.

**மின் ஆளுமை நடவடிக்கைகள்**

**3.31** கீழ்க்கண்ட நடவடிக்கைகள் தற்சமயம் இணையதளம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

(அ) எப்.எல்–2, எப்.எல்–3, எப்.எல்–3ஏ மற்றும் எப்.எல்–3ஏஏ உரிமங்களுக்கு அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ய அனுமதி ஆணை வழங்குதல்.

(ஆ) பீரினை, பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி ஆணை வழங்குதல்.

(இ) எப்.எல்–2, எப்.எல்–3, எப்.எல்–3ஏ மற்றும் எப்.எல்–3ஏஏ உரிமங்கள் புதுப்பித்தல்.

மேற்கண்ட நடவடிக்கைகளால் வெளிப்படைத் தன்மை ஏற்பட்டுள்ளதோடு அனுமதி ஆணைகள் வழங்குதல் மற்றும் உரிமங்கள் புதுப்பித்தல் ஆகியவற்றில் கால அவகாசம் வெகுவாகக் குறைந்துள்ளது.

**மனந்திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி**

**3.32** இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவியைக் கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம்

காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத் தண்டனை பெற்றவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காக **2003–2004**–ஆம் ஆண்டில் முதன் முதலாக அரசு நிதி உதவியினை கடனாக வழங்கியது.

**3.33** **2011–2012**–ஆம் ஆண்டில், கடனாக வழங்கப்பட்டு வந்த மறுவாழ்வு நிதி ரூ.**2.20** கோடியிலிருந்து ரூ.**5.00** கோடியாக உயர்த்தப்பட்டதோடு மானியமாகவும் மாற்றப்பட்டது. இதேபோன்று, **2012–2013** முதல் **2017–2018** வரை ஒவ்வொரு ஆண்டும் ரூ.**5.00** கோடி மறுவாழ்வு நிதி மானியமாக வழங்கப்பட்டது.

**3.34** ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் மற்றும் துணை/உதவி ஆணையர் (ஆயத்தீர்வை) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மறுவாழ்வுக் குழு, மதுவிலக்கு குற்றவாளிகளின் பொருளாதார மறுவாழ்விற்காக வழங்கப்படும் மானியத் தொகையை அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

**3.35** இக்குழு மதுவிலக்கு குற்றங்களுக்குத் தண்டனை பெற்று, மனந்திருந்தி, பொருளாதார நிலையில் நலிவுற்று இருப்பவர்களின் மறுவாழ்விற்கென பயனாளிகளைத் தெரிவு செய்யும். தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், ஊதுவத்தி, கற்பூரம், உடனடி சாம்பிராணி, மெழுகுவர்த்தி, காகிதக் குவளை, துணி சோப்பு, துணி சோப்புப் பொடி முதலியவைகளைத் தயாரித்தல் மற்றும் சிறு வியாபாரங்களை மேற்கொள்ள, அதிகபட்சமாக நபர் ஒன்றுக்கு ரூ.30,000/–க்கு மிகாமல் மானியமாக நிதியுதவி வழங்கப்படுகிறது.

**3.36** கடந்த 10 ஆண்டுகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கடனுதவி / மானியம் மற்றும் பயனாளிகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | நிதி ஒப்புதல் செய்யப்பட்டது (ரூபாய் லட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2008–2009 | 250 (கடன்) | 1651 |
| 2009–2010 | 220 (கடன்) | 1569 |
| 2010–2011 | 220 (கடன்) | 1524 |

| | | |
|---|---|---|
| 2011–2012 | 500 (மானியம்) | 1898 |
| 2012–2013 | 500 (மானியம்) | 1900 |
| 2013–2014 | 500 (மானியம்) | 1780 |
| 2014–2015 | 500 (மானியம்) | 1643 |
| 2015–2016 | 500 (மானியம்) | 1666 |
| 2016–2017 | 500 (மானியம்) | 1650 |
| 2017–2018 | 500 (மானியம்) | 1666 |

**மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு**

**3.37** மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே மாநிலம் தழுவிய விழிப்புணர்வு ஏற்படுத்த, முதன் முதலில் **2003–2004**–ஆம் ஆண்டில் ரூ.**10.00** இலட்சமும், அதன்பின்பு **2004–2005**–ஆம் ஆண்டில் ரூ.**30.00** இலட்சமும் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும், **2011–2012** முதல் **2014–2015** வரையிலான ஆண்டுகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அரசால் ஒவ்வொரு ஆண்டும் ரூ.**1.00** கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**3.38** மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்த ஒதுக்கப்பட்ட நிதியானது, **2015–2016**–ஆம் ஆண்டில், ரூ.**1.00** கோடியிலிருந்து, ரூ.**3.00** கோடியாக அரசால் உயர்த்தப்பட்டது.

**3.39** **2016–2017**–ஆம் ஆண்டு முதல், விழிப்புணர்வு முகாம்கள் நடத்த ரூ.**3.00** கோடியை தமிழ்நாடு மாநில வாணிபக் கழக நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசால் ஆணையிடப்பட்டு, அவ்வாறே தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் நிதியை வழங்கி வருகிறது.

**3.40** **2017–2018–**ஆம் ஆண்டில், விழிப்புணர்வு முகாம்கள் நடத்த மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையருக்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழக நிதியிலிருந்து ரூ.**3.00** கோடி வழங்க அரசால் ஆணையிடப்பட்டது.

**3.41** ஒவ்வொரு மாவட்டத்திலும், மது அருந்துவதற்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும்,

கீழ்க்கண்ட அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| 1) | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2) | மண்டல காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்) | உறுப்பினர் |
| 3) | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் | உறுப்பினர் |
| 4) | முதன்மைக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 5) | துணை ஆணையர்/ உதவி ஆணையர் (கலால்) | உறுப்பினர்– அமைப்பாளர் |
| 6) | மக்கள் தொடர்பு அலுவலர் | உறுப்பினர் |

**3.42** அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும், தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் விழிப்புணர்வுப் பேரணி, முகாம்கள், கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், சிறு நகைச்சுவை நாடகங்கள், பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பொது இடங்களில் விளம்பரம் மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தல், மனித சங்கிலி போன்றவைகள் மாணவ மாணவிகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் மூலமாகவும், ஒவ்வொரு மாவட்டத்தின் தனித்துவமான சமூக, பொருளாதார, புவியியல்

காரணிகளுக்கு ஏற்றவாறும் மாவட்ட நிர்வாகத்தால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 4. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

**4.1** கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்வதை ஒழிப்பதற்காகவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதை தடுப்பதற்காகவும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

**4.2** காவல் துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) இப்பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக காவல் கண்காணிப்பாளரின் கீழ் சென்னையில் ஒரு மத்திய புலனாய்வுப் பிரிவு இயங்கி வருகிறது. மேலும், சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மண்டல அலுவலகங்கள் தலா ஒரு காவல் கண்காணிப்பாளரின் (அமலாக்கம்) கீழ் இயங்கி வருகின்றன. சென்னையில் உள்ள மத்திய புலனாய்வுப் பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக 2 காவல் துணை கண்காணிப்பாளர்களும், 6 காவல் ஆய்வாளர்களும்,

8 உதவி ஆய்வாளர்களும், ஒரு தலைமைக் காவலரும் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

4.3 மாநிலத்தில் 96 அமலாக்கப் பிரிவுகள் இயங்குகின்றன. காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பிரிவுகள் அனைத்தும் 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தினை அமல்படுத்தும் பொருட்டு காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவட்டம்/நகரங்களில் உள்ள துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்களின் நிர்வாகம் மற்றும் செயல்பாட்டு கட்டுப்பாட்டின்கீழ் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் அதனைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் ஆளினர்கள் பணியாற்றுகின்றனர்.

**சோதனைச் சாவடிகள்**

4.4 அண்டை மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு

மதுபானம், தெளிந்த சாராவி மற்றும் சாராய உறைகள் ஆகியவை தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாக கடத்தப்படுவதை கண்காணித்து தடுக்க, நாகப்பட்டினம் (5), கன்னியாகுமரி (1), தேனி (1), திருவள்ளூர் (5), வேலூர் (5), கடலூர் (4), விழுப்புரம் (9), கிருஷ்ணகிரி (7), ஈரோடு (1), சேலம் (2), நீலகிரி (1), திருவாரூர் (1), திருப்பூர் (1) மற்றும் கோயம்புத்தூர் (1) ஆகிய மாவட்டங்களில் மற்றும் சென்னை மாநகரில் (1), ஆக மொத்தம் 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் தமிழ்நாட்டில் உள்ளன. இது தவிர 7 நடமாடும் சோதனைச் சாவடிகள் நாகப்பட்டினம் (2), கடலூர் (1), விழுப்புரம் (1), கிருஷ்ணகிரி (1), திருவள்ளூர் (1) மற்றும் திருவாரூர் (1) ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

**திடீர் வாகனத் தணிக்கை**

**4.5** தெளிந்த சாராவி என்பது செறிவு மிகுந்த ஆல்கஹால் ஆகும். இது போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மலிவு விலை மதுபானமாக விற்பதற்காக கடத்தப்படுகிறது. அநேக சமயங்களில் இத்தகைய சாராய விற்பனையால் கள்ளச்சாராய இறப்புகள் நிகழ்கின்றன. மாநிலம் முழுவதும் மத்திய புலனாய்வுப் பிரிவு மற்றும்

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளின் அலுவலர்களால் சேகரிக்கப்படும் நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில் திடீர் வாகனத் தணிக்கைகள் முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன. 2017–2018–ஆம் ஆண்டில் இத்திடீர் வாகனத் தணிக்கைகள் மூலம் 423 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1 லாரி, 15 வேன்கள், 9 கார்கள் மற்றும் 36 இருசக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 61 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

**காந்தியடிகள் காவலர் பதக்கம்**

**4.6** கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் சிறப்பாகப் பணிபுரிந்த காவல்துறை பணியாளர்களுக்கு, குடியரசு தினத்தன்று, காந்தியடிகள் காவலர் பதக்கமும், ரூ.40,000/– பரிசுத் தொகையும் வழங்கப்படுகிறது. 2017–ஆம் ஆண்டிற்கான பதக்கம், 2018, ஜனவரி 26–ஆம் நாள் குடியரசு தினத்தன்று, ஐந்து காவல்துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

**இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்**

**4.7** தெளிந்த சாராவியை கடத்துதல் பற்றி தங்கள் உயிரைப் பணயம் வைத்து மதுவிலக்கு அமலாக்க

அலுவலர்களுக்கு தகவல்கள் தரும் தகவலாளர்களுக்கு வெகுமதி வழங்குவதற்காக 2016—2017—ஆம் நிதியாண்டிற்கு, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.15 லட்சம் (126 வழக்குகளுக்காக) ஒப்பளிக்க அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

**செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்**

4.8 2017—2018—ஆம் ஆண்டில், ரூ.2.60 கோடி மதிப்புள்ள 6.50 லட்சம் லிட்டர் கள்ளச் சாராயம், ரூ.69.02 லட்சம் மதிப்புள்ள 69,020 லிட்டர் தெளிந்த சாராவி, ரூ.7.93 கோடி மதிப்புள்ள பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்பட்ட 7.93 லட்சம் மதுபான பாட்டில்கள் மற்றும் ரூ.16 கோடி மதிப்புள்ள இதர வகை மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. மதுவிலக்கு குற்றங்களில் பயன்படுத்தப்பட்ட 3,954 மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

**தடுப்புக் காவல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982)**

4.9 மாநிலத்தில் பொது ஒழுங்கு சீர்குலைவதற்கு மூல காரணம் கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்,

வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப்பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் போன்றவர்களின் அபாயகரமான நடவடிக்கைகள் ஆகும். 1982–ஆம் ஆண்டில், இந்தக் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வழிவகை செய்யும் தமிழ்நாடு சட்டம் 14/1982 இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, மேற்கூறிய குற்றவாளிகள் ஓராண்டு வரை தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர். 2017–2018–ஆம் ஆண்டில் மதுவிலக்கு குற்றங்களில் தொடர்ந்து ஈடுபட்ட 314 மதுவிலக்கு குற்றவாளிகள் இச்சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

**கள்ளச்சாராய இறப்பு சம்பவங்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்**

4.10 கள்ளச்சாராயத்தில் முக்கியமாக ‘‘மெத்தனால்’’ என்ற ரசாயனப் பொருளின் பயன்பாட்டால் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. ஆதலால் ‘‘மெத்தனால்’’ எளிதாகக் கிடைப்பதைத் தடுக்கும் பொருட்டு, அதனை 2002–ஆம் ஆண்டு முதல், 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வரம்புக்குள் அரசு கொண்டு வந்தது. மேலும், மெத்தனால்

வைத்திருத்தல், பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், வெளியிடங்களில் இருந்து பெறுதல், விற்பனை செய்தல் போன்றவற்றை கவனமாக கட்டுப்படுத்திட, **2002–**ஆம் ஆண்டில், **1959–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன.

மெத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அதனைப் பயன்படுத்தும் மற்றும் வைத்திருக்க உரிமம் பெற்ற நிறுவனங்கள் முதலியவற்றை சோதனையிட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை அமலாக்கத் தலைமையிடத்தில் தீவிர ஆய்வு செய்யப்படுகிறது.

***4.11 இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால், இம்மாநிலத்தில் 2011 முதல் கள்ளச்சாராய இறப்புகள் ஏதுமில்லை.***

**மதுவிலக்கு உதவி மையம் – 10581**

**4.12** மதுவிலக்கு உதவி மையத்திற்காக கட்டணமில்லா மதுவிலக்கு உதவி எண்.**10581** ஒன்று ஏற்படுத்த அரசால் அனுமதிக்கப்பட்டு, அது மதுவிலக்கு

தலைமையக மத்திய புலன் விசாரணைப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் **24.07.2013** அன்று முதல் இயங்கி வருகிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், தெளிந்த சாராவியை கடத்துதல், போலி மதுபானம், கள்ளச்சாராயம் விற்பனை ஆகிய மதுவிலக்கு குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தகவலாளர்கள் இலவசமாக தகவல் அளிப்பதற்கு ஏதுவாகயிருப்பது இச்சேவை மையத்தின் நோக்கமாகும். இந்த உதவி எண் **24** மணி நேரமும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தலைமையக மத்திய புலன் விசாரணைப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் இயங்கி வருகிறது. **01.04.2017** முதல் **31.03.2018** வரை மொத்தம் **3,209** தகவல்கள் உதவி மையத்தில் பெறப்பட்டு அதன்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

**5.1** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) **23.05.1983** அன்று, **1956–**ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் சாராயத்தை தமிழ்நாட்டில் மொத்த

விற்பனை விநியோகம் செய்யும் உரிமையை தனியாரிடமிருந்து கையகப்படுத்தியது.

1937—ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) பிரிவு 17—C(1—A)(a)—ன்படி தமிழ்நாடு முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் மற்றும் அயல்நாட்டு மதுபான வகைகளை மொத்த விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் மதுபான மொத்த விற்பனையை இந்நிறுவனம் 23.05.1983 முதல் செய்து வருகிறது. 1937—ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவு 17-C(1-B)(a)—ன்படி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 29.11.2003 முதல் மதுபான சில்லறை விற்பனையை ஏற்று நடத்தி வருகிறது. மேலும், இந்நிறுவனம் இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளையும் விற்பனை செய்து வருகிறது.

## இயக்குநர் குழுமம்

**5.2** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இயக்குநர் குழுமம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை இயக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை) அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, அரசு முதன்மைச் செயலாளர், வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

## பங்கு மூலதனம்

**5.3** இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.15.00 கோடி ஆகும். மொத்த பங்கு மூலதனமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது .

**பதிவு அலுவலகம்**

**5.4** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக பொது மேலாளர் (நிதி), மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை), தொழிலாளர் துணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்) மற்றும் நிறுவனச் செயலர் மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

**மண்டல அலுவலகங்கள்**

**5.5** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையில் **5** மண்டல அலுவலகங்கள் உள்ளன. இவ்வலுவலகங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

**மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், கடைகள் மற்றும் மதுக் கூடங்கள்**

**5.6** **25.05.2018** அன்றுள்ளவாறு, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு **38** மாவட்ட மேலாளர் அலுவலகங்களும், **43** இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும், **3,866** மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் மற்றும் **1,456** சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக் கூடங்களும் உள்ளன.

**கிடங்குகள்**

**5.7** மதுபானங்களை இருப்பு வைப்பதற்கு, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் **43** மதுபானக் கிடங்குகள் உள்ளன. இந்த **43** மதுபானக் கிடங்குகளில் **31** மதுபானக் கிடங்குகள் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்குகின்றன.

**சில்லறை விற்பனைப் பணியாளர்கள்**

**5.8** **31.03.2018** அன்றுள்ளவாறு, சில்லறை விற்பனைக் கடைகளில் ஒப்பந்த/தொகுப்பூதிய அடிப்படையில் **7,287** கடை மேற்பார்வையாளர்களும், **15,532** விற்பனையாளர்களும் மற்றும் **3,644** உதவி

விற்பனையாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் இப்பணியாளர்களுக்கான தொகுப்பூதியமானது உயர்த்தி வழங்கப்படுகிறது.

**சில்லறை விற்பனைப் பணியாளர் நலத்திட்டங்கள்**

**5.9** சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியத்துடன் ஒவ்வொரு ஆண்டும் **20** சதவீதம் போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் (EPF Scheme), தொழிலாளர் வைப்புநிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் (EDLI Scheme), பணிக்கொடை (Gratuity), குடும்ப சேம நலநிதித் திட்டம் (Family Benefit Fund Scheme), ஆண்டு கூடுதல் ஊக்கத் தொகை (Annual Additional Fixed Incentive) ஆகிய திட்டங்கள் சில்லறை விற்பனைப் பணியாளர்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மூடப்பட்ட சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்த பணியாளர்களை மீளப் பணியமர்த்தல்**

**5.10** **19.06.2016** மற்றும் **24.02.2017** அன்று மூடப்பட்ட **1000** சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்த பணியாளர்கள் மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற உத்தரவின்படி மூடப்பட்ட கடைகளில் பணிபுரிந்த பணியாளர்கள், இந்நிறுவனத்தில் தகுந்த பணியிடங்களில் மீளப் பணியமர்த்தப்பட்டார்கள். மேலும், எந்தப் பணியாளருக்கும் பணியிழப்பு ஏற்படவில்லை.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் கூடுதலாக உள்ள கடைப் பணியாளர்களை, கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் பணியமர்த்த அரசாணை (நிலை) எண்.**125**, கூட்டுறவு, உணவுப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (CA2) துறை, நாள் **18.08.2017**–ல், அரசு அனுமதி அளித்தது.

இந்த அரசாணையின்படி, **166** விற்பனையாளர்கள் மற்றும் **8** உதவி விற்பனையாளர்கள், கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களாக (Packers) பணியமர்த்தப்பட்டார்கள்.

**மதுபான வகைகள் கொள்முதல்**

**5.11** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநிலத்தில் இயங்கி வருகின்ற **11** இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், **7** பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் **1** ஒயின் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது, பீர் மற்றும் ஒயின் வகைகளை கொள்முதல் செய்து வருகிறது.

**இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கடைகள் மூலம் விற்பனை செய்தல்**

**5.12** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், **250** வகையான (Brands) வெளிநாட்டு மது, பீர் மற்றும் ஒயின் வகைகளை **150–**க்கும் அதிகமான உரிமம் பெற்ற (FL-11) சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்கிறது.

**கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் எச்சரிக்கை ஒலி சாதனங்கள் நிறுவுதல்**

**5.13** திருட்டு நடப்பதைத் தடுப்பதற்காகவும், பாதுகாப்பை மேம்படுத்தவும், தமிழ்நாடு மாநில வாணிபக்

கழகம், தனது 38 மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 40 கடைகளில் எச்சரிக்கை ஒலி சாதனத்தை நிறுவியுள்ளது. மேலும், மாநிலம் முழுவதும் உள்ள மதுபானக் கடைகளில், 1,250 கடைகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மின்னணு பற்றுச்சீட்டு இயந்திரங்கள்**

5.14 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பற்றுச் சீட்டுகளை கையினால் எழுதும்போது ஏற்படும் தாமதம் மற்றும் தவறுகளைத் தவிர்க்கவும் மற்றும் சில்லறை விற்பனைக் கணக்குகள் மற்றும் சரக்கு இருப்பு விவரங்களை சுலபமாகப் பராமரிப்பதற்காகவும், சில மாவட்டங்களில் மின்னணு பற்றுச்சீட்டு இயந்திரங்கள் நிறுவப்பட்டன. இந்த இயந்திரங்கள் சென்னை (வடக்கு), சென்னை (மத்தியம்), சென்னை (தெற்கு), காஞ்சிபுரம் (வடக்கு), காஞ்சிபுரம் (தெற்கு), திருவள்ளூர் (கிழக்கு), திருவள்ளூர் (மேற்கு), திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் (வடக்கு), கோயம்புத்தூர் (தெற்கு), மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), ஈரோடு, சேலம் மற்றும் கரூர் மாவட்டங்களில் அமைந்துள்ள மதுபானக் கடைகளில் நல்ல

முறையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள மாவட்டங்களிலும் மின்னணு பற்றுச்சீட்டு இயந்திரங்கள் விரைவில் நிறுவப்படும்.

**மது விற்பனை இல்லாத நாட்கள்**

**5.15** **03.01.2012** முதல் மது விற்பனை இல்லாத நாட்கள் **5**–லிருந்து **8**–ஆக உயர்த்தப்பட்டு உள்ளன. அவை காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள் நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகியவை ஆகும். இது தவிர, முக்கிய நிகழ்வு நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடைய நாட்கள் ஆகியவையும் மது விற்பனை இல்லாத நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

**அரசு வருவாய்**

**5.16** அரசின் வருவாய் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:-

**(ரூபாய் கோடியில்)**

| வரிசை எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 2003–04 | 1657.10 | 1982.83 | 3639.93 |
| 2 | 2004–05 | 2549.00 | 2323.03 | 4872.03 |
| 3 | 2005–06 | 3176.65 | 2854.12 | 6030.77 |
| 4 | 2006–07 | 3986.41 | 3487.20 | 7473.61 |
| 5 | 2007–08 | 4764.05 | 4057.11 | 8821.16 |
| 6 | 2008–09 | 5755.42 | 4846.08 | 10601.50 |
| 7 | 2009–10 | 6740.59 | 5757.63 | 12498.22 |
| 8 | 2010–11 | 8115.90 | 6849.52 | 14965.42 |
| 9 | 2011–12 | 9956.06 | 8125.10 | 18081.16 |
| 10 | 2012–13 | 12125.31 | 9555.36 | 21680.67 |
| 11 | 2013–14(*) | 5034.82 | 16640.07 | 21674.89 |
